Date: 30.10.2025
OS/No. 196/2024 (118/2014)
PW1- மல்லிகா, க/பெ. குப்பன்

**<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

வயலூரில் எனக்கு எத்தனை ஏக்கரா நிலம் உள்ளது என்றால் 1 ஏக்கர் நிலம் உள்ளது. 1 ஏக்கரா நிலம் என் கல்யாணத்திற்கு பின்பு வாங்கியதா முன்பு வாங்கினார்களா என்றால் என் மாமனார் எனது திருமணத்திற்கு முன்பாகவும வாங்கினார், திருமணத்திற்கு பின்பாகவும் வாங்கினார். 04.05.1985ல் விருதம்பாளுக்கு என் தம்பி மணி நிலத்தை கிரையம் கொடுத்தது பற்றி எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. விருதம்பாளை அழைத்து வந்து சொத்தை கிரையம் கொடுக்குமாறும் அந்த பணத்தை என்னிடம் கொடு என்று நான் கேட்டதால் மணி மேற்கண்ட கிரையத்தை அந்த தேதியில் கொடுத்து கிரைய தொகை முழுவதையும் என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் நான் ஒரு ரூபாய் கூட பெறவில்லை. அந்த பணத்தை வைத்து தான் நான் வயலூர் கிராமத்தில் சொத்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் 28.12.1992ல் பாஞ்சாலை அழைத்து வந்து சொத்தை கிரையம் கொடுக்குமாறும் அந்த பணத்தை என்னிடம் கொடு என்று நான் கேட்டதால் மணி மேற்கண்ட கிரையத்தை அந்த தேதியில் கொடுத்து கிரைய தொகை முழுவதையும் என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

10.11.1997ல் அண்ணாமலை குமாரர் மாணிக்கம் என்பவரை நான் அழைத்து வந்து அவருக்கு சொத்தை கிரையம் கொடுக்குமாறும் அந்த பணத்தை எனக்கு கொடுக்குமாறு நான் கேட்டுக்கொண்டதால் சொத்துக்களின் ஒரு பகுதியை மாணிக்கத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டு அந்த கிரைய தொகைகைய என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போடுவேனா, கைநாட்டா என்றால் கைநாட்டு போடுவேன். 10.11.1997ல் மாணிகத்திற்கு கொடுத்த கிரையத்தில் நான்

கைநாட்டு வைத்துள்ளேனா என்றால் கைநாட்டு வைத்தேன் அந்த கைநாட்டை நான் சர்வீஸ் வாங்குவதற்காக கேட்டதால் தான் நான் அந்த கைநாட்டை வைத்தேன். நான் சொத்தை விற்ததற்காக தான் கைநாட்டு வைத்தேன் தற்போது சர்வீஸ் வாங்குவதற்காக கைநாட்டு வைத்தேன் என்று பொய் சொல்கிறேன் என்றால சரியல்ல.

விருதம்பாள், பாஞ்சாலை, மாணிக்கம் ஆகியோருக்கு கொடுத்த கிரைய சொத்தை நான் இந்த வழக்கில் பாகம் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 3 பேருக்கும் விற்பனை செய்த சொத்தை இந்த வழக்கில் சேர்காததற்கு காரணம் மேற்படி சொத்தை விற்பனை செய்த பணத்தை நான் பெற்றுக்கொண்டதால் தான் நான் மேற்படி சொத்தை பொறுத்து இந்த வழக்கில் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. பூர்வீக சொத்துகளில் எனக்குரிய பாகத்திற்கான பணத்தை மேற்படி மூவரிடமும் இருந்து நான் பெற்றுக்கொண்டதால் தான் நான் 2014ம் ஆண்டுவரை எந்தவொரு வழக்கும் போடவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி மணிக்கு மனநிலை சரியில்லாததை அறிந்து குடும்ப சொத்து தொடர்பாக பிறர் சொல்லி கொடுத்து மேற்கண்ட வழக்கில் எனக்கு உரிமையில்லாத சூழலிலும் தாவா சொத்துகளில் பாகம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பாகத்தை நான் ஏற்கனவே மூவருக்கும் கிரையம் கொடுத்ததை பெற்றுக்கொண்டதால் இந்த பாக தாவாவை தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

எனது பதிவு அலுவலகம் வேட்டவலம் பதிவு அலுவலகம் தான். என்னை பெரிய வசதியான குடும்பத்தில் தான் என்னை திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் அந்த குடும்பம் வசதியில்லாத குடும்பம் . எனக்கு நல்ல சீருடன், நிறைய நகை போட்டு சிறப்பாக கல்யாணம் செய்தார்கள் என்றால் ஒரு புடவை வாங்கி கொடுத்து தான் என் மாமா என்னை

கல்யாணம் செய்து கொடுத்தார்கள். என்னை நல்ல சீருடன் தான் கட்டி கொடுத்தார்கள் நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பிக்கு நான் வைத்தியம் செய்வதற்கு முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்து காரில் ஏற்றினேன் அவர் அந்த பக்கமாக இறங்கி தப்பித்து பேய்விட்டார் அதோடு விட்டுவிட்டேன். இந்த வழக்கு போட்ட பின்னர் நான் என் தம்பிக்கு வைத்தியம் செய்ய எந்தவொரு செலவும் செய்யவில்லை என்றால் நான் எதுவும் செலவு செய்யவில்லை. விற்பனை செய்யப்பட்ட சொத்துகள் எமது பாகத்திற்காக விற்பனை செய்யப்பட்டவை என்பதை அறிந்தும் அதை மறைத்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விருதம்பாள், பாஞ்சாலை, மாணிக்கம் ஆகிய மூவரையும் இந்த வழக்கில் சேர்பதற்கு நான் முயன்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் மேற்கண்டவாறு மூவருக்கும் விற்பனையான சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்பதற்கு நான் முயற்சி செய்தேனா என்றால் எனக்கு விபரம் போததால் நான் சேர்க்கவில்லை. தற்போது மேற்படி சொத்துக்களை சேர்த்து வழக்கு தாக்கல் செய்கிறீர்களா என்றால் மேற்படி விற்பனையான சொத்துக்களை நான் இந்த வழக்கில் சேர்க்க விருப்பம் இல்லை தாவா சொத்து மட்டும் எனக்கு கிடைத்தால் போதும். மேற்படி விற்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் எனக்காக விற்கப்பட்ட சொத்துகள் என்பதால் தான் மேற்படி சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்து பாகம் கேட்க எனக்கு விருப்பம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி விற்கப்பட்ட மூன்று சொத்துக்களை பற்றி எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்தில் எந்தவொரு பாகத்தையும் கொடுக்கவேண்டிய அவசியமும் இல்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் என் தம்பி மணிக்கு மனநிலை சரியில்லை என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், எனது தம்பியின் வாரிசுகளையும் நான் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். நான் உண்மையை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரத்தை இந்த நீதிமன்றம் கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கீழ்பென்னாத்தூர்